International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 1 Jan - Mar 2026

Published on 14, Jan - Mar 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# தமிழ்நாட்டில் இடஒதுக்கீடு

**சு. ரகு**
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)
(பதிவு எண் : 216012866010 / 2016)
**முனைவர் இர. சாம்ராஜா**
உதவிப் பேராசிரியர், ஆய்வு நெறியாளர்
பெரியார் சிந்தனை உயராய்வு மய்யம், அரசியல் அறிவியல் துறை
பெரியார் மணியம்மை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம்
(நிகர்நிலைப் பல்கலைக்கழகம்), தஞ்சாவூர் – 613 403

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழகத்தில் தொழில் அடிப்படையிலான ஜாதிப் பாகுபாட்டில் உயர் ஜாதியாகக் கருதப்பட்ட பார்ப்பனர்கள் சமூகத்திலும் பொருளாதார நிலையிலும் உயர்வு பெற்றவர்களாக இருந்துள்ளனர். பிராமணர் அல்லாதாராகக் கருதப்பட்ட சூத்திரர்கள் சமூகத்தில் மட்டுமல்லாமல் பொருளாதார நிலையிலும் மிகவும் பின் தங்கியவர்களாக இருந்துள்ளனர். இத்தகைய ஏற்றத்தாழ்வினைப் போக்கிட வேண்டும் என்ற சமூகநீதிக் கண்ணோட்டத்தில் டாக்டர் அம்பேத்கர், தந்தை பெரியார், நீதிக்கட்சித் தலைவர்கள் மற்றும் தமிழக முதல்வர்களின் சிந்தனைகளில் எழுந்ததே இடஒதுக்கீடாகும். அந்த வகையில் இடஒதுக்கீடு ஜாதிய அடிப்படையில் வழங்கப்பட்ட பின்னரே, பொருளாதாரத்தில் பின் தங்கியிருந்த மக்கள் இன்று கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் முன்னேற்றம் கண்டுள்ளனர். எனவே, தமிழ்நாட்டில் இடஒதுக்கீடு குறித்த வரலாற்றை அறிவது அவசியமாகிறது.

**முதன்மைச் சொற்கள்**

வகுப்புவாரி பிரதிநிதித்துவம் – சமூகநீதி – நீதிக்கட்சி – டாக்டர் சி.நடேசனார் – சர்.பிட்டி.தியாகராயர் – டாக்டர் டி.எம்.நாயர்.

**முன்னுரை**

இடஒதுக்கீடு எனப்படும் "வகுப்புவாரி பிரதிநிதித்துவம்" என்பது மக்கள் தொகையின் அடிப்படையில் ஒவ்வொரு வகுப்புகளுக்கும் வழங்கப்படும் அடிப்படை உரிமை ஆகும். அனைத்து மக்களும் சமஉரிமை பெற்று வாழ வேண்டும் என்பதே இதன் நோக்கம் எனலாம். அவ்வகையில், இடஒதுக்கீடு தமிழ்நாட்டில் எவ்வாறு படிப்படியாகப் பெறப்பட்டு, தற்போதைய நிலையில் 69 சதவீத இடஒதுக்கீடாக அமைந்தது என்பதை வரலாற்றுப் பார்வையில் இக்கட்டுரை ஆராய முற்படுகிறது.

**இடஒதுக்கீடு – விளக்கம்**

இடஒதுக்கீடு என்பது லத்தீன் சொல்லான ரிசர்வேர் என்பதிலிருந்து பெறப்பட்டது. இதன் பொருள் பாதுகாப்பு என்பதாகும். "இந்தியச் சமூகம் 3,000 ஆண்டுகளாக சாதி ரீதியாக பிளவுபடுத்தப்பட்டு உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற படிநிலை வரிசையில் கட்டமைக்கப் பட்டுள்ளது. மக்கள் தொகையில் சுமார் 5% ஆக உள்ள பிராமணர் உள்ளிட்ட உயர்

சமூகத்தினரே கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் தொடர்ந்து மேலாதிக்கம் செலுத்தி வருகின்றனர். இந்நிலையில் காலம் காலமாக ஒடுக்கப்பட்டு, தாழ்த்தப்பட்டு, வாய்ப்புகள் மறுக்கப்பட்டு வரும் மக்களுக்கு கல்வி, வேலைவாய்ப்பில் உரிய பிரதி நிதித்துவம் அளிக்கும் முறைக்கே இட ஒதுக்கீடு என்று பெயர். இந்திய அரசியல் சாசனத்திலேயே இத்தகைய இடஒதுக்கீடு உறுதிப்படுத்தப் பட்டுள்ளது." (இரா.சிசுபாலன்,2021)

## சமூக நீதி

1760இல் ஐரோப்பிய நாடுகளில் தொழில் புரட்சி தொடங்கியது. அதனைத் தொடர்ந்து உருவான சோஷலிஸ்ட் இயக்கத்தில் சமூக நீதி எனும் தொடர் முதலில் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டது. 1969இல் முதன் முதலில் ஐ.நா.சபை ஆவணங்களில் சமூகநீதி எனும் சொல் இடம்பெற்றுள்ளது. நமது நாட்டில் காலம்காலமாக வழங்கப்பட்டு வந்த அநீதி, பாகுபாடுகளை அகற்றுவதற் காக இந்தச் சமூகங்களுக்கு வழங்கப்பட்ட நீதியே இடஒதுக்கீடு எனும் சமூக நீதியாகும். மனிதனை மனிதனாகக் கருத முடியாமல் அவரது சாதியை மட்டுமே வைத்து எடை போட முயலும் சிந்தனை காட்டு மிராண்டித் தனமானது என்று வலியுறுத்திய தந்தை பெரியார், பண்பாடு, கலாச்சாரம், நாகரிகம் என்ற பெயரில் சமத்துவத்தை மறுக்கும் அத்தனை அம்சங்களையும் கடுமையாக நிராகரித்தார். சாதி, மத, பாலின பேதமற்ற சமூகமே உயரிய சமூகம் என வலியுறுத்தினார். மொழி மேல் வெறியும் தங்களது பண்பாடு மேல் தீவிர பற்றும் கொண்டுள்ள நபர்களால் நவீன சமூகத்தை உருவாக்க முடியாது என்று திட்டவட்டமாகக் கூறினார்.

அரசின் சமச்சீர் நடவடிக்கைகளில் முக்கிய மானது இட ஒதுக்கீடு எனப்படும் வகுப்பு வாரி பிரதிநிதித்துவம். நமது நாட்டில் ஒரு சில கடைநிலைப் பணிகளைத் தவிர சாதி ரீதியாகத் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு உயர்பதவிகள் கிடைப்பதில் உள்ள தடைகளை நீக்கும் முறையைப் பெரியார், எந்தச் சாதி – கோட்பாட்டின்படி வாய்ப்புகள் மறுக்கப்பட்டனவோ அதே சாதி ரீதியாக வாய்ப்புகளைப் பெற மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினார். எனவே, கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் குறிப்பிட்ட அளவு இடங்களை ஒதுக்கீடு செய்து இதுவரை வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினருக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்று பெரியார் வலியுறுத்தினார்.

இந்தியாவில் இடஒதுக்கீடு முறை தொடங்கப் பட்டது பற்றி காஞ்சா அய்லயா உள் ஒதுக்கீடு குறித்த கட்டுரையில் தரும் கருத்து இங்குக் குறிப்பிடத்தக்கது. "இடஒதுக்கீடு முறை என்பது கோலாப்பூர் அரசரும், சிவாஜியின் பேரனுமான சாகுமகாராஜாவால் தொடங்கப்பட்டது. அவர் தனது அரசில் சில குறிப்பிட்ட பதவிகளை சூத்திரர்களுக்கு ஒதுக்கீடு செய்தார். அதன் பின்னர், இம் முறை பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் தமிழ் நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டது. சில பணியிடங்களைச் சூத்திரர்களுக்கு ஒதுக்கீடு செய்யும் வகையில் பிரிட்டிஷ் மாகாண அரசு சென்னை மாகாணத்தில் வகுப்புவாரி ஆணை யை வெளியிட்டது. நிர்வாக அதிகாரத்தைப் பகிர்ந்து அளிக்கும் வழியினை உறுதி செய்வதாக இது அமைந்தது. விடுதலைப் போராட்ட காலத்தில் ஒரு பெரும் கருத்தியல் போராட்டத்தை டாக்டர் அம்பேத்கர் நடத்தியதன் பின்னர் தெளிவான வரையறை களுடனான அரசியல் மற்றும் நிர்வாக இட ஒதுக்கீட்டுக் கொள்கை உருப்பெற்றது". (ம.மதிவண்ணன், 2022) கோலாப்பூர் அரசரான சாகுமகாராஜா 1902 ஆம் ஆண்டில் தம் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் பிற்படுத்தப்பட்டோர் அனைவருக் கும் 50% வேலைவாய்ப்பிற்கான இடங்களை வழங்கி ஆணை பிறப்பித்துள்ளார்.

## சர்.பிட்டி.தியாகராயர் (1852–1925)

வெள்ளுடைவேந்தர் என்று அழைக்கப்பட்ட சர்.பிட்டி. தியாகராயர் ஒரு பெரும் வணிகர். தோல் பதனிடும் மற்றும் ஏற்றுமதி வணிகத் தை திறம்பட நடத்தினார். தம் பள்ளிப் படிப்பைத் தொடர்ந்து பி.ஏ., பட்டம் பெற்ற தியாகராயர் பொது வாழ்வில் நாட்டம் கொண்டார். சென்னை மாநகராட்சி உறுப்பின ராக 41 ஆண்டுகள் பணியாற்றினார். 1910-1912 ஆண்டுகளில் மாநகராட்சியின் பிரதிநிதி என்ற முறையில் சென்னை மாநில சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற் றினார். காங்கிரஸ் கட்சியில் திரு.டி.எம். நாயரும் இவரும் கருத்து வேறுபாடு கொண்டிருந்து பின்னர். டாக்டர் சி.நடேசனா

ரால் நீதிகட்சியில் இணைந்து பணியாற்றினார்கள். 1912இல் சட்டசபை உறுப்பினரா யிருந்த சர்.பி. தியாகராயர் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டுமென்று ராயல் கமிஷ்னரிடம் கோரியது குறிப்பிடத்தக்க தாகும். 1916இல் மக்களின் சமுதாய நிலைமையை எண்ணி, இந்த நாட்டு மக்களுக்கு கல்வி, உத்தியோகம் இல்லை. சமுதாயத் துறையில் கீழாகவே வைக்கப் பட்டு இருக்கின்றோம் என்று அறிக்கையை வெளியிட்டவர். 1916 நவம்பரில் நீதிக் கட்சியைத் தொடங்கியதற்கான காரணமாக சர்.பிட்டி.தியாகராயர் குறிப்பிட்டதைப் பின் நாளில் பெரியார் எடுத்துக் கூறியிருப்பதன் மூலம் அறிய முடிகிறது. "100க்கு 3 பேராகவே உள்ள பார்ப்பனர்கள் கல்வி, உத்தியோகம் முதலிய சகல துறைகளிலும் ஆதிக்கம் வகித்துக் கொண்டு பார்ப்பனர் அல்லாத பெரும்பான்மையான மக்களை அடித்தளத்தில் வைத்துள்ள நிலையினை மாற்ற வேண்டும். இந்தக் காரணத்தை வைத்துத் தான் இந்த இயக்கத்தை ஆரம்பித்தேன்." (10.4.1963, விடுதலை) மேலும், 1920ஆம் ஆண்டு மாநகராட்சி மன்றத் தலைவராக மக்களால் தேர்ந்தெடுக் கப்பட்ட முதல் இந்திய தலைவர் சர்.பிட்டி. தியாகராயர் ஆவார்.

**டாக்டர். சி. நடேசனார் (1875–18.2.1937)**

இன்றைய இளைய தலைமுறையின் கல்வி வளர்ச்சிக்கு அடித்தளமிட்டது அன்றைய நீதிக்கட்சி ஆட்சி. நீதிக்கட்சியைத் தோற்று வித்த மூலவித்து டாக்டர் சி.நடேசனார் ஆவார். இவர் திராவிட இயக்கத்தின் தந்தை என்று போற்றப்படுகிறார். சென்னை பொன்னேரியில் சின்னகாவனம் என்ற சிற்றூரைப் பூர்வீகமாகக் கொண்ட நடேசனா ரின் முன்னோர்கள் 200 ஆண்டுகளுக்கு முன்னதாகவே திருவல்லிக்கேணி பெரியதெரு என்ற வீரராகவ முதலியார் தெருவில் குடியேறினர். கிருஷ்ணசாமி முதலியாரின் மகனாக 1875ஆம் ஆண்டில் சி.நடேசனார் பிறந்தார். திண்ணைப்பள்ளியில் தெலுங்கு மொழியில் பயின்று, பின்னர், சென்னை மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து எல்.எம்.எஸ் (LMS) பட்டம் பெற்றார். அன்பும் பண்பும் கொண்ட கைராசிக்கார மருத்துவராக ஓய்வின்றிப் பணியாற்றினார்.

டாக்டர் சி.நடேசனார் தாம் பிறந்த திராவிடர் சமுதாயம் மிகக்கீழ்மையாகவும் பிற்போக்கா கவும் இருப்பதைக் கண்டு, அத்தகைய அவல நிலை நீக்கிட முடிவு செய்தார். 1912ஆம் ஆண்டு சென்னை அய்க்கிய சங்கம் என்ற திராவிடர் அமைப்பை ஆரம்பித்தார். பின்னர் பிராமணர்- அல்லா தோரின் சமுதாய, பொருளாதார மற்றும் அரசியல் பிற்போக்கு நிலைமையைப் போக்க பலசொற்பொழிவுகளை நடத்தினார். இதில் திரு.வி.க., சிங்காரவேலர், தியாகராயர், டாக்டர் டி.எம்.நாயர், பனக்கல் அரசர், போன்றவர்கள் கலந்து கொண்டு சொற் பொழிவுகளை நடத்தி, பிராமணர் அல்லா தோரின் அறியாமைகளை விரட்டி அடித்தனர்.

சென்னை திராவிடர் சங்கம் கண்ட நடேசனார், திராவிடர் இல்லம் என்ற ஓர் அமைப்பையும் உருவாக்கினார். அக்காலத் தில் சென்னை போன்ற நகரங்களில் பிராமணர் அல்லாத மாணவர்கள் தங்கி படிக்க, விடுதி வசதி இல்லாத நிலையில், இவ்வில்லம் அவர்களுக்குத் தங்கிப் படிக்க இடமும் உணவும் வழங்கியுள்ளது. திராவிடர் இல்லத்தில் மாணவர்களுக்காக நூலகம் ஒன்றும் திறக்கப்பட்டது. இவ்வில்லத்தில் ஆண்டுதோறும் பட்டம் பெறும் திராவிடர் மாணவர்களுக்குப் பரிசளித்து பாராட்டுரை வழங்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். நடேசனார் திராவிட உணர்ச்சியையும் சுயமரியாதை உணர்வினையும் சமுதாய விழிப்புணர்வையும் ஊட்டி திராவிட மாணவர் களை ஒருமுகப்படுத்தினார். திராவிடத் தந்தை டாக்டர் சி.நடேசனார், சென்னை மாநகர சபையில் சுமார் 25 ஆண்டுகள் உறுப்பினராக இருந்து மக்கள் தொண்டு புரிந்தார்.

**டாக்டர்.டி.எம்.நாயர் (1868–1919)**

திராவிட லெனின் – என்று தந்தை பெரியா ரால் அழைக்கப்பட்ட தாரவாட் மாதவன் நாயர் 1868ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15ஆம் நாள் பாலக்காடு அருகே தாரவாட் என்ற சிற்றூரில் பிறந்தார். தந்தை சங்கரன் நாயர் வழக்கறிஞர் தாய் திருமதி.அம்மாளு அம்மாள் ஆசிரியர். பள்ளி படிப்பு பாலக்காட்டில் அரசு உயர்நிலைப்பள்ளி யிலும் பின்னர் சென்னை மாநிலக் கல்லூரியிலும் பயின்று எப்.ஏ., (Fellow of Arts) பட்டம் பெற்றார். சென்னை மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து சிறிது காலமே பயின்ற

நாயர் மேனாட்டு மருத்துவ பட்டம் பெற விரும்பி 1889இல் இங்கிலாந்து சென்றார். ஸ்காட்லாந்து எடின்பரோ பல்கலைக்கழகத்தில் எம்.பி.சி.எம். (MBCM) பட்டம் பெற்றார். பின்னர் எம்.டி.பட்ட மேற்படிப்பிற்கு பிரான்ஸ் நாட்டு தலைநகரான பாரிஸில் காது, மூக்கு, தொண்டை மருத்துவத்தில் ஆராய்ச்சி செய்து தேர்ச்சி பெற்றார். 1897ஆம் ஆண்டு சென்னை திரும்பி காது, மூக்கு, தொண்டை மருத்துவத்தில் ஒப்பற்ற மருத்துவராக பணியாற்றினார். மிகச்சிறந்த மருத்துவர் மட்டுமின்றி மிகச்சிறந்த பேச்சாளராகவும் ஆண்டிசெப்டிக் பத்திரிக்கையின் ஆசிரியராகவும் இருந்தார்.

1904ஆம் ஆண்டு சென்னை நகராட்சி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சுமார் 12 ஆண்டுகள் நகர மன்ற அங்கத்தினராக பணியாற்றிப் பல சீர்திருத்தங்களைச் (தண்டையார் பேட்டை, கழிவுநீர் திட்டம் உட்பட) செய்தார். 1913-15ஆம் ஆண்டு சென்னை சட்டசபையில் உறுப்பினராக இருந்தார். காங்கிரஸ் இயக்கத்தில் இருந்த நாயர் பல மாநாடுகளில் தவறாது பங்கேற்றார். டாக்டர் சி.நடேச முதலியாரின் வேண்டுகோளின்படி தியாகராயருடன் சேர்ந்து 1916 நவம்பர் 20இல் தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தை உருவாக்க நடேசனாருக்கு உறுதுணையாக இருந்தார். டாக்டர் சி.நடேசனார் காங்கிரஸ் கட்சியில் இருந்து வெளியேறிய டாக்டர் நாயர் மற்றும் தியாகராயரைச் சந்தித்து பிராமணர் அல்லாதோரின் உரிமைகளைக் காத்திடவும் அவர்களின் முன்னேற்றத்திற்கு தொண்டாற்றிடவும் ஒரு அரசியல் கட்சி அமைய வேண்டியதின் அவசியத்தை விளக்கினார். 1916ஆம் ஆண்டு நவம்பர் 20ஆம் நாள் நீதிக் கட்சியைத் தோற்றுவித்தார்.

7.10.1917இல் சென்னை சேத்துப்பட்டில் டி.எம். நாயர் பேசியபோது, பார்ப்பனர் வரலாற்றைத் தோலுரித்துக் காட்டி, வகுப்பு வாரி பிரதிநிதித்துவம் வராமல் நாங்கள் ஓய மாட்டோம்! உட்கார மாட்டோம்! என்ற முழக்கத்தை எல்லோரும் எழுப்ப வேண்டும் என்று கூறினார். 1919இல் சேத்துப்பட்டில் பேசும் போதும், வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வாராமல் தூங்கோம். இது சத்தியம் என்று குறிப்பிட்டுள்ளார். டி.எம்.நாயருக்கு வகுப்பு வாரி பிரதிநிதித்துவத்தின் மீதுள்ள அக்கறையையே இவை பிரதிபலிக்கின்றன. தமக்கு நீரழிவு நோய்க்குச் சிகிச்சை பெறும் விதமாகப் பல எதிர்ப்புகளுக்கு மத்தியில் இங்கிலாந்து சென்று, பிரிட்டிஷ் பாராளு மன்றத்தில் பேசியதை ஆசிரியர் கி.வீரமணி எடுத்துக் கூறுவதன் மூலம் அறிய முடிகிறது.

“டாக்டர் சுமார் ஒருமணி நேரம் பேசினார். நீதிக்கட்சியின் துவக்கம், அதன் கொள்கை, அதன் குறிக்கோள் ஆகியவற்றை விளக்கமாகக் கூறினார். பிராமணரல்லாதாரின் வகுப்புநீதிக் கோரிக்கையை அதன் நேர்மையை தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டினார். அவரது இனிய ஆங்கில மொழிப் பேச்சையும், எளிய விளக்க உரையையும் கேட்ட அனைவரும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்! டாக்டரைப் போற்றிப் புகழ்ந்தனர்! சென்னை மாகாண பிராமணரல்லாதாரின் கோரிக்கை நேர்மையானதே எனப் பேசினர்! சென்னை மாகாணத்தையும், மாகாண மக்களையும் எங்கள் கண்முன் கொண்டு வந்து நிறுத்தி உண்மை காணச் செய்த நண்பரே எனப் புகழ்ந்து, கைகோர்த்து, தோளோடு தோள் நெருங்கி அவரை அரவணைத்துக் கொள்ளாத அங்கத்தினர்களே இல்லை! எங்கள் ஆதரவு சென்னை மாகாண சோதரர்களுக்கு என்றும் உண்டு! அவர்தம் வகுப்பு நீதிக்குப் போரிடுவோம்! அஞ்சற்க! எனக் கூறி உற்சாகமளித்தனர்.” (கி.வீரமணி,2019)

டி.எம்.நாயரின் பேச்சிற்குக் கிடைத்த பயனை கோ.குமாரசாமி குறிப்பிடுவதை ஆசிரியர் கி,.வீரமணி பெருமிதத்துடன் பின்வருமாறு எடுத்துக் கூறுகிறார். “பார்லிமெண்ட் கூட்ட நடவடிக்கையில் மாறுதல் காணப்பட்டது. பிராமணரல்லாதாரின் வகுப்புரிமை நீதியும் கோரிக்கையும் சபையின் விவாதங்களில் இடம்பெற்றன. தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் ஆகியோரின் சமுதாய, பொருளாதார நிலையும் இடம் பெற்றன. இம்மக்களுடைய சமுதாய உரிமையும் அரசியல் உரிமையும் எவ்வாறெல்லாம் உயர்த்தப்பட வேண்டும்; காப்பாற்றப்பட வேண்டும் என்ற விளக்க உரைகளும் கோரிக்கைகளும் இடம் பெற்றன. இப்படிப்பட்ட பார்லிமெண்ட் விவாதங்களும் பேச்சுகளும் பிரிட்டிஷ் பத்திரிகைகளில் முக்கிய இடம்பெற்று வெளிவரவே, பிரிட்டிஷ் பொது மக்களின் கவனம் இந்தியாவின் கோடிக்கணக்கான பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட

மக்களின்பால் திரும்பலாயிற்று! தென்னிந்திய பிராமணர் அல்லாதாரின் உரிமைக் குரலைத் தெரிந்துகொள்ளவும் அவர்களுக்கு ஒரு வாய்ப்பு உண்டாயிற்று." (கி.வீரமணி,2019)

மேலும், பிராமணரல்லாதாரின் வகுப்புரிமை குறித்து பிரிட்டிஷ் மக்கள் தெளிவாக உணர்ந்து கொள்ள ஆங்கிலப் பத்திரிகை களில் டி.எம்.நாயர் எழுதி வந்தது குறிப்பிடத் தக்கதாகும். இங்கிலாந்திலிருந்து 1918 ஆம் ஆண்டின் இறுதியில் சென்னை திரும்பிய டி.எம்.நாயர் 1919 ஜனவரி 7ஆம் நாள் மாலையில் சென்னை வந்தடைந்த்தார். ஆயிரக்கணக்கான மக்கள் அவரை இரயில் நிலையத்திலிருந்து நீதிக்கட்சியின் அலுவல கம் வரை வரவேற்றனர். நீதிக்கட்சி அலுவல கம் வந்ததும் சொற்பொழிவாற்றினார். அப்போது, திராவிடரின் வகுப்புநீதி வெற்றி பெற்றே தீரும் எனக் குறிப்பிட்டார். இவர் தொடர்ந்து இடஒதுக்கீட்டிற்காக முயற்சி செய்தாலும், இடஒதுக்கீடு வழங்கப்படும் முன்னரே உடல் நலம் குன்றி இயற்கை எய்தினார்.

டி.எம்.நாயர் இறந்த 1919ஆம் ஆண்டில் அரசுப்பணிகளில் பார்ப்பனர்களின் ஆதிக்கம் அதிகம் இருந்துள்ளதை வேயுறுதோளி பங்கன் குறிப்பிடுவதன் மூலம் அறிய முடிகிறது. "சரியாக நூறாண்டுகளுக்கு முன், மைசூர் சமஸ்தானத்தில் திவானாக இருந்த சர்.விஸ்வேஸ்வரய்யா என்பவர், அரசுப் பணியிடங்களை பார்ப்பனர்களை வைத்து நிரப்பி மைசூர் அரசாங்கத்தையே பார்ப்பனக் குடியேற்றமாக மாற்றினார். இது தொடர்பாக விசாரணை செய்த லெஸ்லி மில்லர் குழு அன்றைய நிலையைப் படம்பிடித்துக் காட்டியதும், விஸ்வேஸ்வரய்யா தானாகப் பதவி விலகியதும் வரலாறு. 1919ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தரப்பட்ட அந்தக் குழுவின் அறிக்கையில் 11 வது பத்தியில் அரசுப்பணியில் இருப்போரின் விழுக்காடு பற்றிய விவரம் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

(இரா.உமா (தொகுப்பு), 2022:42)

| Salary in Rupees | Community | 1916 | 1917 | 1918 |
|---|---|---|---|---|
| 50 to 100 | Non Brahmins | 32 | 28 | 26 |
| | Brahmins | 68 | 72 | 74 |
| 100 to 250 | Non Brahmins | 18 | 10.14 | 18 |
| | Brahmins | 82 | 81.86 | 82 |
| 250 to 450 | Non Brahmins | 31 | 22 | 24 |
| | Brahmins | 69 | 78 | 76 |
| 450 to 800 | Non Brahmins | 38.5 | 36 | 33 |
| | Brahmins | 62.5 | 64 | 67 |
| 800 and upwards | Non Brahmins | 18 | 24 | 20 |
| | Brahmins | 82 | 76 | 71 |

## முடிவுரை

கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வாய்ப்புகள் முற்றிலும் மறுக்கப் பட்டிருந்த நிலையில், நீதிக்கட்சித் தலைவர் கள் மேற்கொண்ட பலகட்டப் போராட்டங் களால் சமூகநீதி என்ற வகுப்புவாரி இடஒதுக்கீடு பெறப்பட்டு, இந்திய மாநிலங் களிலேயே தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. இதன் மூலம் அனைவருக்கும் சமமான கல்வி, வேலை வாய்ப்பு, பொருளாதாரம் மற்றும் அரசியல் வாய்ப்புகள் கிடைக்கப்பெற்று தங்களின் வாழ்வில் அடுத்த நிலைக்குப் பிற்படுத்தப் பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட மக்கள் உயர்ந்துள்ளனர் என்பது முடிவாகக் கொள்ளப்படுகிறது.

## பயன்படுத்திய நூல்கள்

1. உமா.இரா (தொ), திராவிட இயக்கமும் சமூக நீதியும், தொகுதி – 2(2022), கருஞ்சட்டைப் பதிப்பகம், சென்னை.
2. சிசுபாலன்.இரா, சாதி இடஒதுக்கீடு என்றால் என்ன? (2021), பாரதி புத்தகாலயம், சென்னை.
3. மதிவண்ணன்.ம, உள் ஒதுக்கீடு சில பார்வைகள். (2022), கருப்பு பிரதிகள், சென்னை.
4. வீரமணி. கி, திராவிட லெனின் டி.எம்.நாயர்.